உ

சிவமயம்

# அணிந்துரை

**வைத்திய கலாநிதி இ. லம்போதரன்**
**கனடா சைவ சித்தாந்த பீடம்**
**www.knowingourroots.com**

ஆன்மீக வழிமுறைகள் அனைத்திலும் மேலானது சிவபூசை; ஆன்மீக அனுபவங்கள்அனைத்தினுக்கும் திறவுகோலாய் அமைவது சிவபூசை. எண்ணற்ற அண்ட சராசரங்கள் இருந்தாலும் கோவில் இருப்பது பூலோகம் என்னும் ஆகாய கங்கை அண்டத்தொகுதியில் உள்ள எமது பூமியில்தான். இதனாலேயே "**விண்ணகத்தவரும் மண் மேல் வந்து அரனை அர்ச்சிப்பர்"** என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது; **"இந்தப் பூமி சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கி**" என்று  திருவாசகம் கூறுகின்றது. கோவில்களில் செய்யப்படும் பூசை **பரார்த்த பூசை** ஆகும். இது உலக நன்மைக்காகச் செய்யப்படுவது. இது அண்டசராசரம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறையை அந்த விக்கிரகத்திலே பூசை நிறைவுறும்வரை எழுந்தருளி இருக்கப் பிரார்த்தித்து பூசித்தலாம்.

வீட்டிலே எமது நன்மைக்காகவும் ஆன்மீக ஈடேற்றத்துக்காகவும் இறைவனைப் பூசிப்பது **ஆன்மார்த்த பூசை** ஆகும். இது எமது உயிரின் உயிராக, அந்தராத்மாவாக எம்முள் இருந்து எம்மை இயக்கும் இறையை  எமக்கு முன்னால் உள்ள **பிம்பம் (உருவம்), கும்பம், இயந்திரம்** ஆகிய மூன்றினுள் ஒன்றில் பூசை நிறைவுறும்வரை எழுந்தருளி இருக்கப் பிரார்த்தித்துப் பூசித்தலாம். வீட்டில் உள்ள தெய்வ சொரூபங்களை ஆதரிக்க வேண்டும் என்று இதை ஈழத்துப் பேச்சுவழக்கில் கூறுவார்கள். இல்லங்களில் பூசை அறையில் அல்லது பூசைக் கட்டில் உள்ள தெய்வங்களின் சித்திரப் படங்களுக்கு முன்னால் தினமும் காலையும் மாலையும் தவறாமல் தீபம் ஏற்றுவது என்பது இதனுடைய மிக அடிப்படையான அம்சம் ஆகும். இல்லங்களில் தெய்வ சொருபம் என்னும் விக்கிரகம் வைத்திருப்பவர்கள் தீபம் ஏற்றுவதுடன் தினமும் ஒரு தடவையாவது அதற்குத் தவறாது பூசையும் செய்ய வேண்டும் என்பது விதி. நோய்வாய்ப்பட்டு இயலாதிருக்கும் காலங்களும், பெண்களின் மாதவிலக்கும், துடக்கு காலங்களும் இதற்கு விதிவிலக்கு ஆகலாம்.

இல்லங்களிலே செய்யும் இந்த ஆன்மார்த்த பூசையிலே **வைதீக பூசை, ஆகம பூசை** என்று இரண்டு வகைகள் உள்ளன. **வைதீக பூசை** இலகுவான பூசையாகும். பூசை தயார் படுத்த இரண்டு தொடக்கம் ஐந்து நிமிடங்களும், பூசைக்கு மூன்று தொடக்கம் ஐந்து நிமிடங்களுமாக மொத்தம் ஐந்து தொடக்கம்

பத்து நிமிடங்களுக்குள் யாரும் இலகுவாகச் செய்யக்கூடிய **பஞ்ச உபசார பூசை** இது. வீட்டில் உள்ள ஆண், பெண், பிள்ளைகள் அனைவருமே தனித்தனியாக ஆன்மார்த்த பூசை செய்யலாம். இல்லங்களில் கூட்டு வழிபாடு செய்யும் நவராத்திரி, தைப்பொங்கல் போன்ற காலங்களில் அதற்கு முன்னராகவே தமது தனிப்பட்ட ஆன்மார்த்த பூசையைச் செய்யவேண்டும். சிரார்த்தம் போன்ற பித்ரு காரியங்களுக்கான நாட்களிலே பித்ரு பூசை முடித்த பின்னரே இறை பூசை செய்ய வேண்டும்.

வைதீக ஆன்மார்த்த பூசை என்பது விக்கிரகத்தைச் சுத்தி செய்து, அதற்கு பூ ஒன்றை வைத்து, அதிலே இறையை எழுந்தருளப் பிராத்தித்துப் பின்னர், பஞ்ச உபசாரங்கள் சமர்ப்பித்து வழிபடுவதாகும். பஞ்ச உபசாரங்கள் செய்யும் ஒழுங்கு பின்வருமாறு:

**1. தூபம்** என்னும் சாம்பிராணி வலஞ்சுழியாக மும்முறையும்,

**2. தீபம்** என்னும் எண்ணெய் அல்லது நெய் விளக்கு வலஞ்சுழியாக மும்முறையும் காட்டி,

**3. சந்தனம்,** குங்குமம் வைத்து,

**4. நைவேத்திய**மாக பால், பழம் ஏதாவது ஒன்றை நிவேதித்து,

**5. கர்ப்புர தீபம்** வலஞ்சுழியாக மும்முறை காட்டி,

இந்த பஞ்ச உபசாரங்களின் நிறைவில் ஒரு பூவை விக்கிரகத்தில் சமர்ப்பித்து, இதுவரை அதிலே எழுந்தருளியிருந்து பூசையை ஏற்ற இறையை மீண்டும் எமது ஆன்மாவில் ஒடுக்குதல் வேண்டும்.

பூக்களை முழுமையாகவே சமர்ப்பிக்க வேண்டும் பின்னப்படுத்தி இதழ்ளைப் பிய்த்துப் பூசை செய்யக்கூடாது. பூக்கள் இல்லாது விட்டால் இலைகளைப் பாவிக்கலாம்; இலைகளைப் பாவிக்கும்போது முழுமையாகவோ அல்லது பின்னமாகப் பிய்த்தோ பாவிக்கலாம். பாவித்த வில்வம் இலையை மீண்டும் நீரில் கழுவிப் பூசைக்குப் பாவிப்பதில் குற்றம் இல்லை. பூக்கள், இலைகள் கூட இல்லாதுவிட்டால் அதற்குப் பதிலாக அட்சதை என்னும் மஞ்சள் கலந்த முழு அரிசியைப் பாவிக்கலாம். பழங்கள் கிடைக்காவிட்டால் உலந்த திராட்சை அல்லது பேரீச்சம்பழம்கூட பாவிக்கலாம். வெளியூருக்குப் பயணம் செய்யும் போதும் இப்பொருட்களை எடுத்துச் சென்று தினமும் தவறாமல் பூசை செய்யலாம். மச்ச, மாமிசம் புசிப்பவர்களாக இருந்தால் சைவ உணவுக்கு வரும்வரை தினமும் காலையில் எழுந்து நீராடிய பின்னர் போசனம் மற்றும் ஏனைய கருமங்களுக்கு முன்னர் தமது பூசையைச் செய்து வரலாம். வீட்டில் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஆன்மார்த்த பூசை செய்யவேண்டும். கூட்டு

வழிபாடு செய்யும் காலங்களில் அதற்கு முன்னராக தமது ஆன்மார்த்த பூசையைச் செய்யவேண்டும். நேரம் உள்ளவர்கள் இப்பூசையை காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் செய்யலாம். சிவ தீட்சை எடுத்தவர்கள் நாளாந்தம் தமது நித்திய அநுட்டானத்தின் பின்னர் இப் பூசையைச் செய்து வரலாம். பூசை முடிவில் நேர வசதியைப்பொறுத்து தோத்திரப் பாடல்கள் பாடி வழிபடலாம். விசேட நாட்களில் அபிஷேகத்துடன் பூசையை ஆரம்பிக்கலாம். பிறந்த நாள், திருமண நாள், திவசம் போன்ற விசேட தினங்களில் வீட்டில் சமைத்த உணவு நிவேதிக்கலாம். திவசம், மஹாளயம் போன்ற பித்ருக்களுக்குரிய விசேட தினங்களில் பித்ருக்களுக்குப் பூசித்துப் படைத்த பின்னரே இறை பூசை செய்ய வேண்டும். பூசையின்போது சமைத்த அன்னம் நிவேத்தித்தல் **மஹாநைவேத்தியம்** எனப்படும்; இதற்கு மேலான நைவேத்தியம் இல்லை. ஆர்வம் உள்ளவர்கள் இந்த பஞ்ச உபசார பூசைக்குரிய சுலோகங்களை அல்லது தோத்திரங்களையும் அறிந்து, அவற்றினையும் சொல்லிப் பூசிக்கலாம். ஆர்வமும், நேரமும் உள்ளவர்கள் மேலதிகமாக ஐந்து நிமிடங்கள் எடுத்து **சோடஷ உபசார பூசை** என்னும் பதினாறு உபசார பூசையினைத் தினமுமோ அல்லது விரதம் முதலான விசேட தினங்களிலோ செய்து வரலாம். மொத்தத்தில் **"இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி"** உள்ள இறைக்கு இவ்வாறு நாம் தினமும் ஒரு சில நிமிடங்களாவது செலவழியாமல், ஆதரிக்காமல், ஆராதிக்காமல் **" சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேர மட்டில்"** ஆவது சிந்தியாமல் 'கடவுள் நம்மைக் கை விட்டு விட்டார்; நமக்கு கடவுள் கண் திறக்கவில்லை" என்று துன்ப காலத்தில் நிந்தித்துப் புலம்புவதால் யாது பயன்? **"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் தான்"** என்பது முதுமொழி.

பூசைக்குரிய விம்பங்களிலும் சிவ-சக்தி ஐக்கிய வடிவான ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கத் திருமேனியைப் பூசிப்பதே பூசைகளிலெல்லாம் சிறந்த உத்தமமான பூசை என்று சிவாகமங்கள் செப்புகின்றன. வேதங்களில் விதித்தபடி பூசித்து ஒழுகினாலும், சிவாகமங்களில் விதித்தபடி விசுவசித்து சிவலிங்க பூசை செய்யாமல் முத்தி கிட்டாது என்பது சைவ சமயத்தின் அடிப்படை விதி. பாலர் பள்ளி, சிறுவர் பாடசாலை, இடை நிலைப் பாடசாலை, மேல்நிலைக் கல்வி நிலையம், கல்லூரி, பல்கலைக் கழகம், பட்டப் பின்படிப்பு நிறுவனம் என பல தனித்துவமான கற்கை நெறிகளைக் கொண்ட நிறுவனங்களின் கூட்டு போன்றது வைதீக நெறி. அதிலுள்ள வைதீக பூசை ஒரு நெறி; அதற்கு அப்பால் சாதகன் தனது பக்குவ நிலைக்கு ஏற்ப நெறிகளைத் தேடி நாட வேண்டும்; அல்லது அவனுடைய ஆத்ம விசாரமும், தேடலும் அவனுக்குரிய வழிநெறியைக் காட்டும்.

வைதீக பூசையிலும் மேலானதும், விரிவானதும் **ஆகம வழிப் பூசை**. ஆகமப் பூசை முழுமையானது; ஆன்மீகப் படிநிலையில் நாம் முதிர முதிர ஒவ்வொரு

இதழ்களாக விரிந்து, விரிந்து அதற்கடுத்த புதிய பரிணாமங்களையும், விளக்கங்களையும், காட்சிகளையும், அனுபவங்களையும் குறி காட்டி, வழி நடத்துவது ஆகம பூசை. பாலர் வகுப்பு தொடக்கம் பட்டப் பின்படிப்பு வரையுள்ள அனைத்து நெறிகளையும் ஓரிடத்திலே உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கல்வி நிறுவனம் போன்றது ஆகம பூசை. இதை விநாயகரை வணங்கி, குருவைத் தியானித்து சூரியனுடைய பூசையுடன் ஆரம்பிக்க வேண்டும். சூரிய பூசையானது சிவசூரிய மூர்த்தியின் சண்டிகேசுரரான தேஜச்சண்டர் பூசையுடன் நிறைவு பெறும். தேஜுச்சண்டர் பூசையை சிவ பூசையின் இறுதியிலும் செய்யலாம்.

இதன் பின்னர்

**1. பூத சுத்தி;** இதனுள் **தூல தேக சுத்தி, சூக்கும தேக சுத்தி, ஆன்ம சுத்தி** என்பன அடங்கும்;

**2. தான சுத்தி;** இதனுள் பூசையின் **ஆசமன, பாத்திய, அர்க்கிய, விசேட அர்க்கிய** பாத்திரங்களினதும் அவற்றில் உள்ளவற்றினதும் சுத்தி அடங்கும்;

**3. திரவிய சுத்தி;**

**4. மந்திர சுத்தி;**

**5. இலிங்க சுத்தி**

ஆகிய **பஞ்ச சுத்திகள்** செய்ய வேண்டும். .

இதன் பின்னர் எமது ஆன்மாவில் உயிக்குயிராக, அந்தராத்மாவை நினைந்து தன்னைத் தானே சிவமாகப் பூசிக்க வேண்டும். இது அந்தர்யாகம் என்னும் அகப்பூசை எனப்படும்.

இதன் பின்னர் சிவலிங்கத்தை பீடத்தில் பாவனையால் உள்ள சிவாசனத்தில் எழுந்தருளப் பண்ணி,

**1. அஹிம்சை என்னும் கொல்லாமை,**
**2. இந்திரிய நிக்கிரஹம் என்னும் பொறியடக்கம்,**
**3. க்ஷமா என்னும் பொறுமை,**
**4. தயை என்னும் கருணை,**
**5. ஞானம் என்னும் மெய்யறிவு,**
**6. தவம்,**
**7. ஸத்யம் என்னும் வாய்மை,**
**8. பாவம் என்னும் அருள்**

ஆகிய அட்ட புஷ்பங்களை பாவனையுடன் சாத்தித் தூப தீபம் காட்டிய பின்னர் அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகத்தின் பின்னர் அகத்திலே பூசித்த மூர்த்தியை சிவலிங்கத்திலே எழுந்தருளப் பிரார்த்தித்து பஞ்ச உபசார பூசை அல்லது ஷோடச உபசார பூசை செய்ய வேண்டும்.

இதன் பின்னர் செபம், அர்ச்சனை, தோத்திரம், கீதம் சம்ர்ப்பித்து எழுந்து நின்று தன்னைத் தானே மூன்று முறை சுற்றி ஆன்மப்பிரதட்சணம் செய்து, தாண்டவம் என்னும் ஆனந்தக்கூத்து, தண்டம் என்னும் அட்டாங்க அல்லது பஞ்சாங்க நமஸ்காரம் என்பன சமர்ப்பிக்க வேண்டும். பூசை நிறைவில் சிவலிங்கத்தில் எழுந்தருளி இருந்து பூசையை எற்ற மூர்த்தியை மீண்டும் தன்னுடைய ஆன்மாவில் ஒடுக்கவும்.

இதன் பின்னர் சிவனுடைய சண்டிகேசுரரான துவனிச் சண்டேசுவரரைப் பூசித்து பூசையை நிறைவு செய்யலாம். முன்னர் சூரிய சண்ட பூசை செய்யாதிருந்தால் அதையும் இத்துடன் சேர்த்துச் செய்யலாம்.

சூரிய பூசையில் தொடங்கி சண்டேசுரர் பூசையுடன் நிறைவுறும் ஆகம பூசையான இந்த **சூர்யாதி சண்டாந்த சிவ பூசை** செய்வதற்கு ஆகக் குறைந்தது 30 இல் இருந்து 60 நிமிடங்கள் வரை எடுக்கலாம். இதை **பஞ்ச ஆவரண பூசை**யாக விரிவாகச் செய்ய இரண்டு மணித்தியாலக்களுக்கு மேல் எடுக்கும். ஆர்வமும், வசதியும் உள்ளவர்கள் தினமுமோ அல்லது விசேட தினங்களிலோ அக்கினி வளர்த்து ஓமம், ஆகுதி என்பனவும் செய்யலாம். சிவராத்திரியில் மட்டுமே இரவிலும் பூசிக்க வேண்டும். பிரதோஷ நாட்களில் பிரதோஷ காலமாகிய சூரியன் மறைவதற்கு முன் ஒன்றரை மணி நேரம், பின் ஒன்றரை மணி நேரம் உள்ளடங்கிய மூன்று மணி நேர பிரதோஷ காலத்தில் ஆலய வழிபாடு செய்யவேண்டுமே அன்றி அக்காலத்தில் இல்லத்தில் இருந்துகொண்டு சிவ பூசை செய்யல் ஆகாது.

சைவர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் இன்றைய இயந்திர வாழ்வில் தினமும் ஐந்து நிமிடங்களாவது ஒதுக்கி வைதீக முறையிலான பூசையையேனும் தவறாது செய்து வரலாம். இறைவனுடன் நமக்குள்ள உறவை நினைவு படுத்தி, உறுதிப்படுத்திக் கொண்டாடும் **பூசை, தியானம், ஓமம்** என்னும் மூன்று வழிகளில் பூசை ஒன்றே அனைவருக்கும் பொதுவானதும், இலகுவானதும், எப்பொழுதும் நடைமுறைச் சாத்தியமானதும் ஆகும்., நமது பிள்ளைகள் உட்பட நாம் ஒவ்வொருவரும் தினமும் ஐந்து நிமிடங்களேனும் இதற்கு ஒதுக்கினால் நமது அறியாமைக்கும், துன்பங்களுக்கும், துயரங்களுக்கும், தோல்விகளுக்கும் காரணமாயுள்ள நமது கர்ம வினைகளை ஓட்டி எமக்கு இவ்வுலக வாழ்க்கையில் வருகின்ற இடர்களின் தாக்கங்களைக் குறைக்கவும், தவிர்க்கவும் செய்யலாம். ஆன்மீகத்தில் ஆர்வமும், நாட்டமும் உடையவர்கள் சமய தீட்சை எடுத்து நித்திய அனுட்டானம் செய்து வருவதோடு

வைதீக சிவ பூசையும் செய்து வரலாம். சமய தீட்சை பெற்று சந்தியாவந்தனமான சைவ அநுட்டானத்தை நித்தமும் தவறாது செய்துவருகின்ற பக்தர்களுள் தீவிர ஆன்ம நாட்டமும் அர்ப்பணிப்பும் உள்ளவர்கள் விசேட தீட்சை என்னும் இரண்டாவது தீட்சை பெற்று சிவலிங்கம் எழுந்தருளப்பண்ணி ஆகம வழி சிவபூசை  செய்யத் தொடங்கலாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வைத்திருந்த ஏட்டில் இருந்து அவரது காலத்தின் பின்னர் 1920 இல் அன்றைய யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் பதிப்பிக்கப்பட்ட **சிவபூசைத் திரட்டு** என்னும் இந்நூல் தேவார திருவாசகங்களில் இருந்தும், ஏனைய திருமுறைகளில் இருந்தும், சிவ தருமோத்திரம் போன்ற தமிழ் ஆகம நூல்களில் இருந்தும் சிவ பூசைக்காகத் தொகுக்கப்பட்ட 106 தமிழ் தோத்திரப்பாடல்களின் தொகுப்பு ஆகும். இத்தோடு காப்புச் செய்யுளாக தொடக்கத்தில் ஒரு பாடலும், பின்னிணைப்பாக வேறு சில பிரதிகளில் காணப்பட்ட ஐந்து பாடல்களுமாக மொத்தம் 112 தமிழ் தோத்திரங்கள் கொண்டது இந் நூல். ஆகம வழிச் சிவ பூசையின்  கிரியைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்குமுறையில் வரிசையாகச் சொல்லி, அவை ஒவ்வொன்றின்போதும் ஓத வேண்டிய தமிழ் தோத்திரங்களை அதன் கீழ் தந்திருக்கும் சிவபூசைத் திரட்டு நூலின் அழகே தனி.

ஆகம வழிச் ஆன்மார்த்த சிவ பூசையானது வடமொழியில் உள்ள **காரணம், வாதுளம்** போன்ற ஆகமங்களிலும், **பௌஷ்கரம், மிருகேந்திரம்** போன்ற உப ஆகமங்களிலும், **சோமசம்பு பத்ததி, அகோரசிவ பத்ததி** முதலான ஆகமக்கிரியைக் கையேட்டு நூல்களிலும், **சித்தாந்த சாராவளி, சகலாகம சங்கிரகம், சைவபூஷணம்** முதலான ஆகமத் திரட்டு நூல்களிலும், தமிழ் மொழியில் உள்ள **சிவதருமோத்தர ஆகமம், சைவசமயநெறி, வாயுசங்கிதை, சதாசிவரூபம், மெய்கண்ட சாத்திரங்கள், பன்னிரு திருமுறை** நூல்களிலும் விளக்கப்பட்டிருந்தாலும் விடயங்களை ஒருங்கே தரக்கூடிய நூல் இல்லாதிருந்த குறையை அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் தான் எழுதிப் பதிப்பித்த **சிவபூசை விளக்கம்** நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆகம வழியில் ஆன்மார்த்த சிவபூசையை அறிவதற்கும், பயில்வதற்கும், பயிற்றுவிப்பதற்கும், நாளாந்தம் செய்கையில்  நடைமுறைப்படுத்துவதற்கும் உகந்த மிக எளிமையான, நேர்த்தியான, ஒழுங்கான, சுருக்கமான, இலகுவான, நடைமுறைச் சாத்தியமான நூல் இந்த சிவபூசை விளக்கம் என்றால் அது மிகையாகாது.

இந் நூலை வாசிப்போரில் ஒரு சிலராவது இதன் வழி சிவபூசை செய்ய முயல்வர் என்பது உறுதி. **"சிவபூசை செய்யச் சக்தியற்றவர்களும் இதனை நியமமாக ஓதி வரின் அதனைச் செய்பவர்கள் பெறும் பலனில் ஒரு கூறேனும் அடைவர்"** என்னும் குறிப்பு இந்நூலின் ஆரம்பத்திலே தனியாக அச்சடிக்கப்பட்டுள்ளது. ஞான வழியில் நின்று அகப்பூசை என்னும் அந்தர் யாகம்

மட்டும் செய்பவர்களும் கூட இத்தோத்திரங்களை மனதினால் நினைந்து அகப்பூசை செய்ய மிகுந்த பயன் அடைவர். மனோலயத்துடன் கூடி நின்று ஞானபூசைக்குரிய ஆன்மலிங்கத்தை தம்முள்ளே காண இயலாத அபக்குவிகளும் கூட பூர்வ சென்ம புண்ணிய பலனால் இத் தோத்திரங்களை நியமமாக ஓதி  புறத்தே சிவலிங்கபூசையை தினமும் செய்து வர எம்முடைய மனமும், அறிவும் சிவத்தியான வசமாகும். இவ்வுலக வாழ்வில் துன்பங்கள் நீங்கி பரலோகப் பிராப்தியும் கிட்டும்.

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி**